# மட்/மம/ஓட்டமாவடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை – ஓர் வரலாற்றுப் பார்வை


பெயர் : செல்வி அப்துல் சலாம் சித்தி மஸ்மியா

பதிவு இலக்கம் : EU/IS/2012/AC/22

சுட்டெண் : CS 4892



LIBRARY
07 SEP 2019
EASTERN UNIVERSITY, SRI LANKA.


இவ்வாய்வுக் கட்டுரையானது இளங்கலைமாணி வரலாறு சிறப்பு கற்கைநெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அங்கமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.


FAC696
Project Report
Library - EUSL

EXAMINATION UNIT
FACULTY OF ARTS AND CULTURE
22 JAN 2019
Eastern University, Sri Lanka.



வரலாற்றுத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை


2018.

# முன்னுரை

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றைச் சிறப்புப் பாடமாக பயிலும் நான் எனது இறுதியாண்டுக் கலைமாணித் தேர்விற்காக "மட்/மம/ஓட்டமாவடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை ஓர் வரலாற்றுப் பார்வை" என்ற இவ்வாய்வினைச் சமர்ப்பிக்கின்றேன் இவ்வாய்வின் நோக்கம் ஓட்டமாவடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையை வரலாற்று ரீதியாக ஆய்வு செய்து அதை ஆவணப்படுத்துடன் வெளியுலகிற்கு அறிமுகப்படுத்துவதாகும்.

சமூகத்தின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் கல்வியின் அவசியத்தை உணர்ந்த பிரதேசத்தின் கல்விமான்களதும், நலன்விரும்பிகளதும், பிரதேச மக்களினதும் ஆர்வத்தினாலும், முயற்சியினாலும் பிரதேசத்தின் கல்வித் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் பிரதேச மக்களின் உதவியுடன் 1917.03.19 ஆம் திகதி திரு ஜே.எஸ்.கந்தையா அவர்களினால் ஓட்டமாவடி அரசினர் தமிழ் - முஸ்லிம் கலவன் பாடசாலை எனும் பெயரில் இப்பாடசாலை உருவாக்கப்பட்டது.

ஓட்டமாவடிப் பிரதேசத்தையும், அதனை அண்டியுள்ள பகுதிகளையும் கல்வியில் மேன்மையடையச் செய்த ஓட்டமாவடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை இப்பிரதேசத்தின் வரலாற்றுச் சின்னமாக விளங்குகின்றது. ஆரம்பப் பிரதேச மக்களின் கல்வித் தாகத்தை தணிக்கும் வகையிலும், பிரதேச மக்களின் கல்வியறிவினை மேம்படுத்தும் நோக்குடனும் உருவாக்கப்பட்ட இப்பாடசாலையின் பழமையான வரலாற்றுச் சம்பவங்களும், தற்கால நிலையும் ஆராயப்பட வேண்டியது அவசியமானது என்ற வகையில் இவ்வாய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வுக் கட்டுரையில் ஓட்டமாவடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் தோற்றம், வளர்ச்சி, தற்கால நிலை ஆகிய விடயங்கள் வரலாற்று நோக்கில் ஆய்வு செய்யப்பட்டு மாணவர்களின் கல்வியில் இப்பாடசாலையின் பங்களிப்பு கல்விசார்ந்த, கல்வி சாராத செயற்பாடுகள் மூலம் செயற்படுத்தப்படும் விதம் முதலான விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை பற்றிய வரலாற்று ஆய்வு என்பதுடன் பாடசாலையின் வரலாற்று சம்பவங்கள் ஆவணப்படுத்தப் பட்டுள்ளமையாலும் எதிர்காலத்தில் மற்றுமொரு சமூகம் இதனைப் பின்பற்றி ஆய்வு செய்வதற்கு உதவும் என நம்புகின்றேன்

-ஆய்வாளர்

## பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | i |
| நன்றியுரை | ii |
| அத்தியாயம் - 01 ஆய்வு அறிமுகம் | 1 – 4 |
| அத்தியாயம் - 02 ஆய்வுப் பிரதேச அறிமுகமும் பாடசாலையின் தோற்றமும் | 5 – 18 |
| அத்தியாயம் - 03 ஓட்டமாவடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் வளர்ச்சியும் தற்கால நிலையும் | 19 – 40 |
| அத்தியாயம் - 04 பாடசாலையின் மூலவளங்களும், விளைவுகளும் | 41 – 66 |
| தொகுப்புரையும் பரிந்துரைகளும் | 67 – 71 |
| உசாத்துணைகள் | 72 – 74 |
| பின்னிணைப்புக்கள் | vii – xii |